# திருக்குறளில் அறிவியல் சிந்தனைகள்

முனைவர் கோ. மாரியம்மாள்
உதவிப் பேராசிரியர்
தமிழ்த்துறை (சுயநிதி பிரிவு)
வேளாளர் மகளிர் கல்லூரி (தன்னாட்சி ), ஈரோடு 12

65

**ஆய்வுச் சுருக்கம்**

மனித வாழ்க்கையில் கடினங்களை குறைத்து எளிமையாக ஒரு செயலை செய்யவும் வாழ்க்கை வசதிகளை பெருக்கிக் கொள்ளவும் பயன்படுவது அறிவியல் ஆகும். மக்களின் அனுபவ உண்மைகள் அறிவியலுக்கு அடிப்படையாய் அமைந்திருந்தாலும் அனுபவ கருத்துக்கள் அறிவியல் கருத்துக்களில் இருந்து வேறுபட்டவையானது. ஆயினும் திருக்குறளில் பல அனுபவக் கருத்துக்கள் கூறப்பட்டுள்ளன. அவை அறிவியல் மனப்பான்மையோடும் அறிவியல் நெறி சார்ந்தும் இடம்பெற்றுள்ளன.

**முன்னுரை**

திருவள்ளுவர் அறிவின் அனுபவங்களை உலகிற்கு உணர்த்த வேண்டும் என்ற நோக்கத்தோடு இயற்றப்பட்ட நூலே திருக்குறளாகும். வள்ளுவர் காலத்தில் பிற தொழில்கள் ஆங்காங்கே குறிப்பிட்டாலும் தமிழ்நாட்டில் நிலவிய சமுதாயம் உழவுத் தொழிலை அடிப்படையாகக் கொண்ட சமுதாயமாகும் அக்கால முதல் இக்காலம் வரை தமிழர்களின் உணவு நெல்லினின்று வரக்கூடிய அரிசி உணவு முறையாகும். திருக்குறளில் மக்கள் மனமார்ந்த போக்கில் வாழாமல் அறிவியல் நிறையையும் பின்பற்றி தம் வாழ்க்கை முறையை மேம்படுத்திக் கொண்டுள்ளனர் பல அனுபவ கருத்துக்கள் கூறப்பட்டுள்ளன என்றாலும் அறிவியல் மனப்பான்மையுடன் அறிவியல் நெறி சார்ந்து தன்னகரில்லாத தலைவரின் பொய்யா மொழிக்குள் புதைந்து கிடக்கின்ற அறிவியல் சிந்தனைகள் அன்றைய தமிழரின் அறிவை காட்டக்கூடிய கருத்துக்களை ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**இரு கண்களாக போற்றப்படுபவை**

இலக்கியமும் அறிவியலும் இரு கண்களாக போற்றப்படுகின்றன இலக்கியமும் அறிவியலும் இணைந்த இவ்வுலகத்தை வாழ்விக்கின்றது எல்லா பொருட்களும் அணுக்களின் செரிவாலானது அச்செறிவினை தமிழர்கள் நிலம், நீர் ,காற்று, தீ ,ஆகாயம் என ஐம்பூதங்களாக வகுத்தனர். இவற்றை ஆராய்ச்சி நெறிகளுக்கு உட்படுத்துவதற்கு அறிவின் நெறிகளை துணை செய்தன.'ஆண்ட்ரீவீனர்'ன்னும் பிரஞ்சு நாட்டறிஞர் தன்னுடைய 'கண்டுபிடிப்பு'என்னும் கவிதை தொகுப்பில் அறிவியல் போற்றப்படுகின்றது. இவ்வாறு இலக்கியமும் அறிவியலும் இணைந்து மனித வாழ்க்கையின் வெற்றிக்கு பாடுபட்டு வருகின்றது. இதை உணர்த்தும் வகையில்

"எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும்

கண்ணென்ப வாழும் உயிர்க்கு -குறள்- 392

என்னும் குறளில் அறிவியலும் இலக்கியமும் இரண்டு கண்களாக போற்றப்பட்டாலும் அறிவியலுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளதை அறிய முடிகின்றது

**வேளாண் அறிவியல்**

வேளாண்மை தொழில் பண்டைக்கால முதல் இன்று வரை சிறப்புடன் நடைபெற்று வருகின்றது. இருப்பினும் வேளாண்மை அறிவியல் சிறப்பான முறையில் வளர்ச்சி பெற்று உள்ளன. வேளாண்மைக்குத் தேவையான புதிய புதிய கருவிகளை கண்டுபிடித்துள்ளனர். நிலத்தை உழுதபின் உலரவிடும் முறையை அறிந்துள்ளனர். பின் எருவிட்டு அதில் பயிர் செய்யும் முறையை அறிந்து வைத்துள்ளனர் . அதனை

"தொடுப்புழுதி கஃசா உணக்கின் பிடித்தெருவும்
வேண்டாத சாலப் படும்" - குறள்-1037

என்னும் குறள் உணர்த்துகின்றது.

உழுதல், எறுவிடுதல், களைகட்டல் ,நீர் பாய்சுதல் ,பயிர்களை விலங்குகள் இடமிருந்து பாதுகாத்தல் போன்றவற்றை காத்தனர். இதனை நன்கு உணர்ந்த வள்ளுவர்

"ஏறினும் நன்றாக எருவிடுதல் கட்டபின்
நீரினும் நல்லதன் காப்பு "-குறள்- 1038

என்னும் குறளில் தெளிவுபடுத்துகிறார்.

இவ்வாறு வேளாண்மைக்கு நீரின் தேவையையும் மழையின் தேவையையும் உழுதலையும் பயிர் பாதுகாப்பையும் பற்றி திருவள்ளுவர் அறிவியல் நெறி நின்று விளக்கியுள்ளார். வேளாண்மைக்கும் உயிரினங்களின் வாழ்விற்கும் நீர் இன்றியமையாததாகின்றது . வான்சிறப்பு என்னும் அதிகாரத்தில் திருவள்ளுவர் மழையின் இன்றியமையாமை பற்றிக் குறிப்பிடுகின்றார்.

"நீரின்றி அமையாது உலகெனின் யார்யார்க்கும்
வானின்று அமையாது ஒழுக்கு"-குறள்-20

இக்குறளின் மூலம் மழையின்றி உலகில் நீர் இல்லை .நீரின்றி பிற உயிர்கள் இல்லை என்று வலியுறுத்தப்பட்டுள்ளது.

மேலும்

"காலையிற் கொடியாரை தேர்ந்தெடுத்தல் பைங்கூழ்
களைகட் டதனோடு நேர் "- குறள்- 550

கொலை குற்றம் புரியும் கொடியோர்க்கு அரசு கொலைத்தண்டனை அளிக்க வேண்டும் .அவ்வாறு தண்டிப்பது பயிர்களுக்கு இடையே முளைத்துள்ள களைகளை பிடுங்கி எரிந்து பயிர்களை பாதுகாப்பது நன்மக்களை பாதுகாப்பது என்று 'பைங்கூழ்'களை கட்டலுக்கு என்று ஒப்பிடுகிறார்.

**அறிவியல் மனப்போக்கு**

இயற்கை நிகழ்வுகளில் வாழ்வியல் உண்மையை காண்பதற்கும் மனிதன் தனது சிந்தனைக்கு அறிவிற்கு முழு உரிமையை கொடுக்கிறான் அதன் அடிப்படையில் முடிவு எவ்வாறாக இருந்தாலும் விருப்பு வெறுப்பு இல்லாமல் அதனை ஏற்றுக்கொள்ளும் மனநிலை பெற்றிருந்தால் அதனை அறிவியல் பார்வை என்பர் இந்த வகையான அறிவியல் பார்வை பற்றி திருவள்ளுவர்

எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்

மெய்ப்பொருள் காண்பது அறிவு- குறள் -423

எப்பொருள் இத்தன்மைராயினும் ஒவ்வொரு துறையிலும் அறிவியல் கண்ணோட்டத்தோடு சிக்கல்களை அணுகுமுறை பற்றி தெளிவு படுத்துகிறார் .

”இதனை இதனால் இவன்முடிக்கும் என்றாய்ந்து

அதனை அவன்கண் விடல்”- குறள்- 517

ஒரு வினையை செய்வதற்கு பொருத்தமான ஒருவரை தேர்ந்தெடுக்க வேண்டும். அபிநயம் செய்வதற்கு தேவையான வழி வகைகளை காணும் அறிவும் அதனால் ஏற்படும் துன்பங்களை பொறுக்கும் ஆற்றலும் இருக்க வேண்டும் என்ற அறிவியல் நோக்கோடு தெளிவுறுத்துவதை அறிய முடிகின்றது.

**உடலியல் மருத்துவம்**

மனித வாழ்க்கை மாண்புடன் அமைய வேண்டுமானால் அதற்கு உடல் நலம் பேணுதல் வேண்டும். உடம்பிற்கு வேண்டிய சத்துக்கள் கிடைக்காததால் விஷ உணவுகள் உடலுக்குள் செல்லுதல், அஜீரணம் போன்றவற்றிற்கு வள்ளுவர் மருந்து என்ற அதிகாரத்தில் நோய்க்கான காரணங்கள், வராமல் தடுக்கும் முறைகள் போன்றவற்றை மிகினும் குறையினும் நோய் செய்யும் நூலோர்

வழி முதலா எண்ணிய மூன்று - குறள்- 941

என்ற குறளின் மூலம் எடுத்துரைக்கின்றார்.

வாதம், பித்தம் சிலேத்துமம் போன்றவற்றிற்கு சித்த மருத்துவ முறையை முதன்மைப்படுத்துகின்றார்.

மருந்தென வேண்டாமா யாக்கை கருந்தியது

அற்றது போற்றது யூனியன் –குறள்- 942

அதனால் அளவறிந்து, உண்ட உணவு செரித்துவிட்டது அறிந்து உணவு உண்ண வேண்டும். மனித வாழ்க்கைக்கும் உடல் வளர்ச்சிக்கும் சத்துள்ள உணவு அவசியம் அளவிற்கு அதிகமாக உண்ணும் போது அதுவே நோயாக மாறக்கூடும். தக்க அளவு உணவு உண்டால் மருந்து தேவை இல்லை என்பதை உணர்த்துகிறார்.

”அற்றால் அளவரின் துங்க அத்துடம்பு

பெற்றான் நெடுது மாறு”- குறள்-943

இக்குறளின் மூலம் உடலை பேணும் முறையைப் பற்றிக் கூறுகின்றார் .ஒவ்வாமை தரும் உணவு முறைகளை கருத்தில் கொள்ள வேண்டும் என்கின்றார்.

" மாறுபாடு இல்லாத ஒன்றே மறுத்துண்ணின்
ஊரப்பா தில்லை உயிருக்கு" -குறள் -945

இக்குறளில் அறிவியல் வெறி சார்ந்த அறிவுரைகள் கூறப்பட்டுள்ளன.

நோய் ஏற்படாதவாறு இருக்க வேண்டும் அவ்வாறு நோய் ஏற்பட்டு விட்டால் அந் நோயை தீர்க்கும் வழிமுறையை ஏற்படுத்த வேண்டும். நோயின் தன்மையை உணர்ந்து உரிய முறையில் மருத்துவம் செய்ய வேண்டும்.

என்பதனை

"நோய் நாடி நோய் முதல் நாடி அதனைக்கும்
வாய்நாடி வாய்ப்ப செயல்"- குறள்- 948

என்று திருவள்ளுவர் நோய்க்கான மருத்துவ முறையை கூறுகின்றார்.

வள்ளுவர் குறிப்பிடும் மருந்து என்ற அதிகாரத்தில் மற்ற குறட்பாக்களும் அறிவியல் நெறி சார்ந்து அமைகின்றது.

**தாவரவியல் சார்ந்த அறிவியல்**

தாவரவியல் ஆய்வாளர்கள் பழங்களை சதைப் பெற்றுள்ள பழம் சதை பற்றற்ற பழம் என இரண்டு வகையாக பிரிக்கின்றனர். சதை பற்றற்ற பழ வகையில் நெருஞ்சியை குறிப்பிடுகின்றார். திருவள்ளுவர் நெருஞ்சி பழம் நிறைந்தது.

"அனிச்சமும் அன்னத்தின் தூவியும் மாதர்
அடிக்கி நெருஞ்சிப் பழம் "-குறள் -1120

என்ற குறளில் வள்ளுவரின் அறிவியல் சிந்தனை புலப்படுகின்றது.

**விலங்கியல் சார்ந்த அறிவியல்**

" மயிர்நீப்பின் வாழாக் கவிமா அன்னார்
உயிர் நீப்பர் மானம்"- குறள்- 969

இக்குறளில் கவரிமா என்ற சொல்லானது கவரி மானை கவரிமான் என்பதனை குறிப்பிடுகிறது. தன் உடலில் இருந்து ஒரு மயிர் நீங்கினாலும் உயிர் வாழாத கவரிமான் உலகில் இல்லை என்றாலும் கவரி என்ற விலங்கு இரண்டும் படும் என்று விலங்கினம் குறித்த அறிவியல் செய்தியை திருவள்ளுவர் எடுத்துரைக்கின்றார்.

வானவியல் சிந்தனை

நிலவில் காணப்படும் குழிகளை வள்ளுவர்

"அறுவாய் நிறைந்த அதிர்வதிக்கு போல
மறு உண்டு மாதர் முகத்து "- குறள் 117

என்ற குறளில் நிலவானது தேய்ந்து பின் படிப்படியாக வளர்ந்து நிறைகின்ற நிலாவினிடம் குழிகள் உள்ளது போல இந்த பெண்ணின் முகத்தில் கலங்கம் உண்டோ என்று தலைவியின் முகத்தை நிலவோடு ஒப்பிட்டு பூமியில் நின்று கொண்டு வானோடு ஒப்பிடும் அறிவியல் சிந்தனையை வள்ளுவர் பெற்றுள்ளார்.

**நில வேறுபாடுகள்**

மக்கள் நன்னிலம் எது, பொன் நிலம் எது என்ற வேறுபாடுகளை அறியும் அறிவியல் ஆற்றல் பெற்றிருந்தனர் மேலும் விளைநிலங்கள் அனைத்தும் ஒரே செழிப்பாக விளைவிக்கவில்லை ஒரு நிலத்தில் விளையும் பயிர் மற்றொரு நிலத்தில் விளையும் பயிரை விட அதிக செழிப்பாக வளரும் தன்மையை அறிவியல் முறைப்படி அறிந்து வைத்துள்ளனர்.

என்பதனை

”நிலத்தில் கிடந்தமை கால்காட்டும் காட்டும்
குளத்தில் பிறந்தார் வாய்ச்சொல்”- குறள்- 959

என்ற குறளின் மூலம் நில வேறுபாடுகளை அறியும் அறிவியல் சிந்தனையை அறிந்து வைத்திருந்த முறைறை அறிய முடிகின்றது.

**முடிவுரை**

திருவள்ளுவர் அறிவியல் மனப்பான்மை மிக்கவராகவும் அறிவியல் நிதி சார்ந்தவராகவும் விளங்கியுள்ளார் என்பதை உணரலாம் மருத்துவ செய்திகளை இன்றைய அறிவியலாளர் அறிவியலாளர்கள் ஏற்று க்கொள்ளும் வகையில் அமைந்துள்ளது அறிய முடிகிறது மேலும் இலக்கியத்திற்கும் அறிவியலுக்கும் உள்ள தொடர்பினை கட்டுரை மூலம் அறிய முடிகின்றது .

பார்வை நூல்கள்

1. திருக்குறள் மூலமும் உரையும் -கழக வெளியீடு
2. டாக்டர் தி முருகரத்தினம் குறள் கண்ட பொருள் வாழ்வு .
மதுரை காமராஜர் பல்கலைக்கழகம்.
மதுரை.